**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்**

**வழக்கு எண்: STC 218/2025**

**வழக்கு சாட்சி :PW1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆறுமுகம் | | : | |
| தந்தை பெயர் | : | ராமகோனார் | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | ஆரியகோன்பட்டி | சமயம் | : | |
| தாலுக்கா | | | வயது | : | 49 |

Solemnly affirmed by Thiru.Veeramanikandan , JA of this Court in accordance with the provisions of Act X of 1873

**(எதிரி ஆஜரில்லை, மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.)**

**Solemnly affirmed in accordance with the Indian Oaths Act-1969 Section -6(2) on** the **day 04th day of July 2026.**

**As Per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No. 74663/2024/F1 - Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**

**Adthar Card of the Witness verified.**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10 ஆம் வகுப்பு படித்துள்ளேன். என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு எவ்வளவு விவசாய நிலம் உள்ளது என்றால் 5 ஏக்கர் உள்ளது. நான் பொதுவாக நெல் பயிரிடுவேனா என்றால் நெல், கடலை, பருத்தி ஆகியவற்றை பயிரிடுவேன், தென்னை மரங்கள் உள்ளது. பொதுவாக ஒரு வருடத்திற்கு தோராயமாக நான் எவ்வளவு வருமானம் ஈட்டுவேன் என்றால் சுமார் 3,00,000/- ஆகும். நான் வருமான வரி செலுத்துகிறனே என்றால் இல்லை.

2. எதிரி, எனது சொந்த ஊரான ஆரியகோன்பட்டியில் அரசு நடுநிலை பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான், அவர் 2005 முதல் ஆசிரியர் பணியில் இருந்து வருகிறார் என்றால் சரிதான். அவருக்கு தற்போது மாத ஊதியம் ரூ.88,000/- என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 2012 ஆம் ஆண்டு முதல் எதிரி மேற்கண்ட பள்ளியில் பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். அதே பள்ளியில் நான் பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவராக இருந்து வருகிறேன் என்றால் சரிதான். எந்த வருடத்திலிருந்து நான் தலைவராக இருந்து வருகிறேன் என்றால் 2019 ஆம் ஆண்டு முதல் தலைவராக இருந்து வருகிறேன். எனக்கு 3 பிள்ளைகள் என்றாலும், மூவரும் அதே பள்ளியில் பயின்று வருகிறார்கள் என்றாலும் சரிதான்.

3. எதிரி பணிபுரியும் அதே பள்ளியில் நானும் பெற்றோர் ஆசிரியர் கழக தலைவராக இருப்பதால் எனக்கு எதிரியை பற்றியும், அவரது குடும்பத்தாரை பற்றியும் தெரியுமா என்றால் எதிரியை பற்றி தெரியும், அவரது குடும்பத்தை பற்றி தெரியாது. எதிரியின் மனைவி பெயர் திலகவதி என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

எதிரியின் சொந்த ஊர் திருச்சி என்றால் சரிதான். அவர் திருச்சியில் இருந்துதான் தினமும் பள்ளிக்கு வந்து செல்வார் என்றால் சரிதான். எதிரி திருச்சி கே.கே நகர், சாத்தனூர் மெயின் ரோட்டில், சபரி மில் எதிரே M.P என்ற பெயரில் மளிகை கடை வைத்திருந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் அந்த கடைக்கு சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன். அந்த கடையின் அளவு சுமார் 40 x 20 அடி அளவு இருக்கும் என்றால் சரிதான். மளிகை கடையை எதிரியும், அவரது மனைவியும் நடத்தி வந்தார் என்ற விவரமும், அதன் மூலம் அவர்கள் மாதம் ரூ.1,00,000/– வருமானம் ஈட்டிவந்தார்கள் என்ற விவரமும் எனக்கு தெரியுமா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. அந்த மளிகை கடையை 2024 ஆம் வருடம் நான், எதிரியிடமும், அவரது மனைவியிடமும் விலைபேசி வாங்கிகொண்டேன் என்றால் சரிதான்.

4. மேற்படி நான் கிரையம் வாங்கிய விவரத்தை 100 ரூபாய் பத்திரத்தில் எழுதி கொண்டோம் என்றால் சரிதான். அதன் அசல் பத்திரம் என்னிடம் தான் உள்ளது என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் அந்த கடை என்ன தொகைக்கு பேசி முடிக்கப்பட்டது என்ற விவரமும், நான் கொடுத்த தொகை குறித்த விவரமும் அதில் உள்ளது என்றால் சரிதான். 2024 க்கு பின்பு தற்போது வரை அந்த மளிகை நான்தான் நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். அந்த கடையில் இருந்து செலுத்தப்படும் GST Tin நம்பர் மற்றும் அதற்கான உரிமம் போன்ற ஆவணங்கள் எதிரியின் மனைவி திலகவதி பெயரில் இருந்தது என்றால் சரிதான்.

5. மேற்சொன்ன 100 ரூபாய் பத்திரத்தில் நான் எதிரியின் மனைவி திலகவதி என்பவரிடமிருந்து கிரையம் வாங்கியதாகதான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் எதிரி சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். அதன்பின்னிட்டு அதே பகுதியில் எதிரி ஸ்ரீகுமரன் மளிகை ஸ்டோர் என்ற பெயரில் தற்போது நடத்தி வருகிறார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். இந்த விவரம் தெரிந்து அதே பகுதியில் மளிகை கடை இருப்பதால் எனக்கு வருமானம் பாதித்து வருகிறது என எதிரியிடம் முறையிட்டேன் என்றால் சரிதான். அதனால் அங்கு கடை வைக்கவேண்டாம் என நான் எதிரியிடம் ஆட்சேபனை செய்தேன் என்றால் சரிதான்.

6. எனது புகாரில் எதிரி தனது முன்கடனை தீர்ப்பதற்காகவும், குடும்ப அவசர செலவிற்ககாகவும் கடன் பெற்றதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த முன்கடனை எதிரி எவ்வளவு தொகை, யாரிடம், எதற்காக, எப்போது வாங்கினார் என்ற விவரங்களை கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் அதுப்பற்றி தெரியாது. எதிரிக்கு என்ன குடும்ப அவசர செலவு இருந்தது என்ற விவரத்தை கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. நான் கடன் கொடுத்த பிறகாவது எதிரிக்கு என்ன முன்கடன் இருந்தது , என்ன குடும்ப அவசர செலவு இருந்தது என்ற விவரத்தை கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. தற்போது வரை எனக்கு அதுபற்றி தெரியாது என்றால் சரிதான்.

7. என்ன தேதியில் எதிரி என்னிடம் கடன் வாங்கினார் என்றால் 25.04.2025 ஆம் தேதி கடன் வாங்கினார். அந்த கடனை நான் எங்கு வைத்து, யார் முன்னிலையில் கொடுத்தேன் என்றால் எதிரி வேலைபார்க்கும் பள்ளிக்கு வெளியே வைத்து கொடுத்தேன், அப்போது யாரும் இல்லை. பள்ளிக்கு வெளியே வைத்து கொடுத்த

விவரத்தை புகாரிலும், சட்ட அறிவிப்பிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன 100 ரூபாய் பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயராக உள்ளேனா என்றால் அது இந்த வழக்கிற்கு சம்மந்தம் இல்லாததால் தாக்கல் செய்யவில்லை. மேற்சொன்ன 100 ரூபாய் பத்திரத்தில் எதிரியின் மனைவிக்கும், எனக்கும் சம்மந்தப்பட்ட மளிகை கடை சம்மந்தப்பட்ட கணக்குகள் உள்ளதாலும், அந்த பத்திரத்தை நீதிமன்றத்தில் ஒப்படைத்தால் இந்த வழக்கு எதிரிக்கு எதிராக பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் நீதிமன்றத்திற்கு தெரியவந்துவிடும் என்பதால் அந்த பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் தயராக இல்லை என்றால் சரியல்ல.

**(எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்கு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து / படிக்க கேட்டு சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்து செய்தார்.

**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், இலுப்பூர் .**